**காலி மாவட்டம் 33 கமநல சேவைக் குழுக்கள் - 2023**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 காலி மாவட்டத்தின் 33 கமநல சேவைக் குழுக்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

காலி மாவட்டத்தின் 33 கமநல சேவைக் குழுக்களுக்குரியதாக விநியோகிக்கப்பட்ட 33 கணக்காய்வு அறிக்கைகளிலும் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்ததுடன் அதற்கான காரணங்களாக இருந்த பொருண்மையான குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள்

#### 1.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களில் உள்ளடங்கியுள்ள கணக்கீட்டு கொள்கைகளுடன் இணங்காமை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 09 கமநல சேவைக் குழுக்களினால் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட்டு அது தொடர்பாக கணக்கீட்டுக் கொள்கையின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 18 கமநல சேவைக் குழுக்களினால் கணக்காண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்ற அடிப்படை கணக்கீட்டுக் கொள்கையின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| (இ) | 32 கமநல சேவைக் குழுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் நிதிக் | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் சமர்ப்பித்த படிவத்தின் பிரகாரம் கணக்கு | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி இலக்கம் |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டிய கூறுகளுக்கு இடையே தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று தயாரித்து நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருக்கவில்லை. | அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 21 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி இலக்கம் 53 இன் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் மூலம் ஒப்பீட்டு ரீதியான தகவல்களின் வேறுபாடுகள் தேவையாயின் அல்லது அனுமதி வழங்கப்பட்டிருக்குமாயின் தவிர நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடுகின்ற சகல தொகை ரீதியான தகவல்களுக்காகவும் கடந்த காலப் பகுதியின் ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மீள்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் 30 கமநல வங்கிகளின் நிதி செயலாற்றல் கூற்று, நிதி நிலைமைக் கூற்று மற்றும் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் முன்னைய ஆண்டின் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் சமர்ப்பித்த படிவத்தின் பிரகாரம் கணக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி இலக்கம் 53 இன் பிரகாரம் ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 14 கமநல சேவைக் குழுக்களின் நிலையங்கள் அமைந்துள்ள காணி மற்றும் 03 குழுக்களின் கட்டடங்கள் மற்றும் 03 குழுக்களின் புல் வெட்டுகின்ற 05 இயந்திரங்கள் மற்றும் 04 குழுக்களில் 08 கணனிகள் போன்ற நிலையான சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணிகள் கமநல சேவை நிலையத்திற்கு கையேற்பதற்குத் தேவையான நடவடிக்கைககள் மேற்கொள்ளப்படும். கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்தின் மூலம் சொத்துக்களின் பெறுமதி வழங்கப்பட்ட பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காண்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலக்கம் 7/12/4/5 என்ற 2021 யூலை 15 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி மற்றும் இலக்கம் 7/12/4/5 என்ற 2024 சனவரி 12 ஆந் திகதிய கமநல அபிவிருத்தித் திணைக்கள கடிதத்தின் பிரகாரம் கமநல வங்கியின் இலாபத்தில் கமநல சேவைக் குழுக்களுக்கு 27 சதவீதமும், ஊழியர் ஊக்குவிப்புப் படிக்காக 23 சதவீதமும் ஒதுக்க வேண்டியிருந்த போதிலும் 06 கமநல சேவைக் குழுக்கள் அந்த ஒதுக்கீடுகளை மேற்கொண்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 04 கமநல சேவைக் குழுக்களினால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 156,322 பெறுமதியுடைய காலாதியாகிச் செல்கின்ற இருப்பு ஒன்று நிதி நிலைமைக் கூற்றில் மிகுதி இருப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. | காலாவதியான இருப்புக்களை பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் 44 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கமநல அபிவிருத்தி ஆணையாளரால் 04 கமநல சேவைக் குழுக்களுக்கு கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த டெக்டர் மீண்டும் கமநல சேவை ஆணையாளருக்கு கையளிக்கப்பட்டிருந்துடன் பிரதேவல கமநல சேவைக் குழுவினால் 2017 ஆம் ஆண்டின் போது குழுவிற்குச் சொந்தமாக குபோட்டா டெக்டர் ரூபா 103,000 இற்கும், 2018 ஆம் ஆண்டில் டெக்டர் டேலர் ரூபா 21,500 இற்கும் மற்றும் 02 கூருள்ள தட்டைக் கலப்பைகள் ரூபா 28,100 தொகைக்கும் விற்பனை செய்யப்பட்டிருந்தது. அந்த அகற்றப்பட்ட சொத்துக்களுக்காக கமநல அபிவிருத்தி ஆணையாளருக்கு செலுத்த வேண்டிய கூட்டு | கடன் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்காக மாவட்ட அலுவலகத்திற்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். கெரதேவலையில் விற்பனை செய்யப்பட்ட டெக்டர் தொடர்பான தகவல்கள் நிலையத்திற்கு எழுத்துமூலம் கிடைத்திருக்கவில்லை. | நிலையான சொத்துக்களை அகற்றும் போது அது தொடர்பான கடப்பாட்டுப் பொறுப்புக்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மொத்தமான ரூபா 1,124,780 கடன் மீதி நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டமை மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (உ) | லபுதுவ மற்றும் வலஹந்துவ கமநல சேவைக் குழுக்களுக்குச் சொந்தமான கட்டிடங்களில் முறையே ரூபா 6,200,000 தொகைக்கும் மற்றும் ரூபா 5,000,000 தொகைக்கும் மீளாய்வாண்டின் போது மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீள் மதிப்பீட்டு இலாபத்தைக் கணிப்பீடும் போது அத்திகதியில் சொத்துக்களின் தேறிய பெறுமதிக்குப் பதிலாக ஆரம்ப கிரயத்தைக் கவனத்தில் கொண்டதன் காரணமாக மீள்மதிப்பீட்டு இலாபம் ரூபா 370,088 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீள் மதிப்பீட்டு இலாபம் சரியாகக் கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 11 கமநல சேவை குழுக்களின் நடைமுறையல்லாச் சொத்துக்களில் 31 விடயங்களும் இழிவுப் பெறுமதி பூச்சியமாக நிதி நிலைமைக் கூற்றில் உள்ளக்கப்பட்டிருந்தது. அதனை மீண்டும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படாமையினால் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமானத் தேய்வு முடிவடைந்த சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2023 திசெம்பர் 21 ஆந் திகதி 7/5/3/2 என்ற கமநல சேவை பிரதி ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் பகலகம்பகல கமநல சேவை நிலையத்தின் கட்டிடம் ரூபா 4,100,000 ஆக மதிப்பீடு | 2024 ஆம் ஆண்டில் ரூபா 4,100,000 மீதியின் பிரகாரம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் 225,005 மீதி மீள் மதிப்பீட்டு கணக்கிற்கு | நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 4,325,005 ஆக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையால் நடைமுறையல்லாச் சொத்துக்கள் ரூபா 225,005 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. பினிகஹன கமநல சேவைக் குழுவின் கட்டடம் ரூபா 2,500,000 பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அத நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்படாமையால் நடைமுறை அல்லாச் சொத்துக்கள் அப் பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மாற்றப்பட்டு அந்த மீதி மற்றும் பெறுமானத் தேய்வு ஒதுக்க மீதிகளுக்கு இடையிலான வேறுபாடு மீள் மதிப்பீட்டு ஒதுக்கமாக முன்கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கணக்கு அறிக்கை தயாரிக்கின்ற சந்தர்ப்பம் வரையில் மதிப்பீட்டு சான்றிதழ் அல்லது அறிக்கை ஒன்று காணப்படாமையினால் கட்டிடம் ரூபா 2,500,000 பெறுமதியில் கணக்கீடு செய்வதற்கு முடியாதிருந்ததை அறியத்தருகின்றோம். | |

### 1.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 கமநல சேவைக் குழுக்களில் 07 கணக்கு விடயங்கள் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் காண்பிக்கப்பட்ட கணக்கு மீதிகளின் பெறுமதி மற்றும் அதற்குரிய நேரொத்த அறிக்கையின் பிரகாரம் காண்பிக்கப்பட்ட பெறுமதிக்கும் இடையே ரூபா 543,564 இணக்கம் இன்மை காணப்பட்டது. | ஏற்றுக்கொள்வதுடன் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இணக்கம் செய்து உரிய சரி செய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 18 கமநல சேவைக் குழுக்களின் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் குழுக்களுக்கு கிடைக்க வேண்டிய கமநல வங்கி இலாபப் பங்கு மற்றும் கமநல வங்கியின் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் குழுக்களுக்கு செலுத்த வேண்டிய மீதியாக இருந்ததுடன் ரூபா 5,665,225 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குழுக்கள் மற்றும் கமநல வங்கிகளுக்கு இடையே காணப்படுகின்ற இணக்கமின்மையை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.2.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 31 கமநல சேவைக் குழுக்களில் ரூபா 41,302,369 பெறுமதியான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக் கணக்குகளில் 187 விடயங்களுக்குரியதாக கணக்காய்விற்கு கோரப்பட்ட சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் அந்த மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கணக்கு மீதிகளுக்குரிய கணக்காய்விற்கு கோரப்பட்ட சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம் | | | |
| (i) 53(1) ஆம் பிரிவு | 03 கமநல சேவைக் குழுக்களின் அதிகாரப் பிரதேசத்திற்குரிய விவசாயக் காணிகள் தொடர்பான பதிவேடு தயாரித்தல் தொடர்பான திருத்தங்கள் மற்றும் மீள்திருத்தப்பட்டு ஆணையாளர் நாயகத்தால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பரீட்சித்து சமர்ப்பிக்கப்படும். | கமநல அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 53(4)(அ) ஆம் பிரிவு | ஒவ்வொரு 03 வருடங்களுக்கும் ஒரு தடவை குழுவின் ஒவ்வொரு பதிவேடுகளும் ஆணையாளர் நாயத்தால் பரீட்சித்து உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் 07 கமநல சேவைக் குழுக்களில் அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை ல. | பரீட்சித்து சமர்ப்பிக்கப்படும். | கமநல அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 56(1) ஆம் பிரிவு | ஒவ்வொரு விவசாய காணிக்காகவும் தீர்மானிக்கப்படுகின்ற ஏக்கர் வரித் தொகை ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் அறவிட்டு பூர்த்தி செய்ய வேண்டிய போதிலும் 11 கமநல சேவைக் குழுக்களில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 1,429,717 நிலுவை ஏக்கர் வரி மீதி காணப்பட்டது. | 2024 ஆம் ஆண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கமநல அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | 56(3) மற்றும் 56(4) ஆம் பிரிவுகள் | 06 கமநல சேவைக் குழுக்களின் நிலுவைப் பணம் செலுத்துதலை புறக்கணிக்கின்ற விவசாயிகளுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வரியை அறவிடாமைக்கு காணி அரசாங்கத்தின் செயற்திட்டத்திற்காக கையேற்றல், காணிகளை கூறுகளாக்குதல், காணிகளுக்காக நீதிமன்ற நடவடிக்கைகள் காணப்படுகின்றமை, ஒதுக்க பிரதேச காணிகள் காணப்படுகீன்றமை போன்ற விடயங்கள் காரணமாக இருந்தது. திணைக்கள ஆலோசனையைப் பெற்று நிலுவை வரி செலுத்தாத விவசாயிகளுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கமநல அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ஆ) | இலங்கை சனநயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i.) | நிதிப்பிரமாணம் 110 | 06 கமநல சேவைக் குழுக்களின் இழப்பு மற்றும் நட்டம் தொடர்பான பதிவேடு ஒன்று பேணிச் | இழப்பு நட்டப் பதிவேடு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செல்லப்பட்டிருக்க வில்லை. | | எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 880 மற்றும் 08/2020 மற்றும் 2020 யூன் 25 ஆந் திகதிய கமநல அபிவிருத்தி திணைக்கள சுற்றறிக்கை | 30 கமநல சேவைக் குழுக்களின் நிதி அல்லது களஞ்சியத்திற்கு பொறுப்பாக இருக்கின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் வருமானம் சேகரிக்கும் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய கடமைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர்கரினால் பிணைப் பணம் வைக்க வேண்டியிருந்த போதிலும் பிரதேச உத்தியோகத்தர்கள் மற்றும் வருமானம் சேகரிக்கும் உத்தியோகத்தர்களால் பிணை வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களின் பிணை வைப்பைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| (இ) | கமநல சேவைகள் ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| (i) | 1986 ஒக்தோபர் 21 ஆந் திகதிய இலக்கம் 264 என்ற சுற்றறிக்கை | குழு கட்டிடத்தின் அறைகள் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு திணைக்களங்கள், நிறுவனங்களில் இருந்து ஆண்டின் போது கிடைக்க வேண்டிய அறை வாடகை, ஆண்டு முடிவடைவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் அந்த ஆண்டின் திசெம்பர் மாதம் வரை அறவிட வேண்டிய அறை வாடகைக்காக உறுதிச் சீட்டுக்கள் சமர்ப்பித்து அந்த வாடகைப் பணம் அறவிட வேண்டிய போதிலும் 18 கமநல சேவைகள் குழுக்கள் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,550,836 நிலுவை மீதி காணப்பட்டது. | முன்னிருந்து கொண்டு வரப்படுகின்ற மீதிகளைக் கண்டறிந்து சரி செய்வதற்கு எதிர்வரும் கணக்காண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 1988 மே 27 ஆந் திகதிய இலக்கம் 322(7/10/4/3) | காணி உரித்து வரித் தொகை கையேற்கப்பட்ட திகதியில் இருந்து 14 நாட்களுக்குள் உரிய நபருக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை | யாருக்கு செலுத்த வேண்டியது என இனங்காண முடியாமல் நீண்ட காலம் முதல் கொண்டுவரப்படுகிக்ற | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | என்ற சுற்றறிக்கை | எடுக்க வேண்டி இருந்ததுடன் ஒரு வருட காலத்தில் பணம் கையேற்க படாதிருக்குமாயின் கமநல சேவை நிதியத்திற்குச் செலவு வைக்க வேண்டியிருந்த போதிலும் 15 கமநல சேவை குழுக்கள் மீளாய்வாண்டின் இறுதியில் தீர்த்து வைக்காத ரூபா 372,103 வரித் தொகை மீது காணப்பட்டது. | மீதிகளை எதிர்காலத்தில் கமநல சேவை நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இனங்காணப்பட்ட மீதிகளை எதிர்காலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (iii) | 1992 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய இலக்கம் 439/92 என்ற சுற்றறிக்கை மற்றும் 1995 செப்தெம்பர் 07 ஆந் திகதிய இலக்கம் 0459/95 என்ற சுற்றறிக்கை | சேகரிக்கப்படுகின்ற ஏக்கர் வரி வருமானத்தில் 20 சதவீதம் கமநல அபிவிருத்தி நிதியத்திற்கு அனுப்பி வைக்க வேண்டியிருந்த போதிலும் 23 கமநல சேவைக் குழுக்கள் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,505,056 தொகையை அந்த நிதியத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| (iv) | 2012 பெப்ரவரி 29 ஆந் திகதிய இலக்கம் 04/2012 என்ற சுற்றறிக்கையின் 5.6(1) பிரிவு | கமநல வங்கி, கமநல சேவைக் குழுவின் அலகு ஒன்றாக இருந்தமையால் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் 33 குழுக்கள் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக பிரதான அலுவலகத்தில் இருந்து ஆலோசனை வழங்கப்படவில்லை. | மேற்படி |
| (ஈ) | விவசாய அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை இலக்கம் 2016/NFC/FCG vi சுற்றறிக்கையின் 6.4 ஆம் பந்தி | மானிய பசளை அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்பட்ட பணம் அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைக்க வேண்டி இருந்த போதிலும் 03 கமநல சேவைக் குழுக்களால் அவ்வாறு பசளை விற்பனையால் கிடைத்த ரூபா 229,125 தொகை விவசாய அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | வருமான நிலைமை சிறந்த நிலைக்கு வந்ததன் பின்னர் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் 21 குழுக்களின் செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 3,987,997 மிகையும், 12 குழுக்களில் ரூபா 1,118,118 பற்றாக்குறையும் காணப்பட்டது. அதன் பிரகாரம் 33 குழுக்களின் நிதி விளைவுகளின் ஒட்டு மொத்த மிகை ரூபா 2,869,879 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நிதி விளைவுகளின் ஒட்டுமொத்த மிகையின் கூட்டுமொத்தம் ரூபா 5,882,048 ஆகும். 33 கமநல வங்கிகளின் மீளாய்வாண்டில் மிகையின் கூட்டுமொத்தம் ரூபா 15,530,194 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகையின் கூட்டுமொத்தம் ரூபா 11,276,361 ஆகும்.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

(அ) 21 குழுக்களின் செயற்பாட்டு விளைவுகளின் மிகைக்காக வீட்டுத் தோட்ட வருமானம், ஏக்கர் வரி வருமானம், வைப்பு வட்டி வருமானம், ஏனைய பசளை விற்பனைகள், மரக்கறி நாற்றுக்கள் விற்பனை, நாற்றுக்களின் விற்பனை, விதை நெல் விற்பனை, வயல் காணி ஏனைய பணிகளில் ஈடுபடுத்துதலில் கட்டண வருமானம் அதிகரிக்கப்பட்டமை மற்றும் பசளைக் கொள்வனவு, பசளை பயன்பாட்டு செலவினம், நிலையங்களைப் பராமரித்தல் மற்றும் தொழிலாளர் கூலி வீட்டுத் தோட்ட அபிவிருத்தி செலவினம் குறைவடைந்து சென்றமை என்பன தாக்கமளித்திருந்தது.

(ஆ) 12 குழுக்களின் செயற்பாட்டு விளைவுகளின் பற்றாக்குறைக்காக வீட்டுத் தோட்ட வருமானம், பசளை பயன்பாட்டு வருமானம், விதை நெல் விற்பனை வருமானம், ஏனைய பசளை விற்பனை, மரக்கறி நாற்றுக்கள் விற்பனை, கன்றுகள் விற்பனை குறைவடைந்தமை மற்றும் பிரயாண செலவினம், காகிதாதிகள், தபால் மற்றும் அச்சிடல் செலவினம், தொலைபேசி மற்றும் மின்சார செலவினம், பயிற்சி செலவினம், இருப்பு பதிவழித்தல் செலவினம், கட்டிட பெறுமானத் தேய்வு செலவினம் அதிகரித்தமை என்பன பற்றாக்குறை உயர்வடைந்து செல்வதற்கு தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 25 கமநல சேவைகள் குழுக்களால் குழு ஸ்தாபிக்கப்பட்ட கூட்டுமொத்தமான 23 ஏக்கர் 29 பேர்ச் காணியின் அளவு கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு கையேற்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இணங்குவதுடன் கமநல சேவை நிலையம் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்களை கையேற்று வருடாந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள காணிகளைக் கையேற்று பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 142(2) இன் பிரகாரம் அரசாங்கத்திற்காக சேகரிக்கப்படுகின்ற பணம் | இந்த மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | விரைவாக பெறும் உத்தியோகத்தருக்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் கெரதேவல மற்றும் கோதாகொட கமநல சேவை குழுக்களுக்கு பசளை மானிய நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் 2005 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட ரூபா 100,000 மற்றும் ரூபா 150,000 ஆன முற்பணத் தொகை மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அலுவலகத்திற்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 – 2023 காலப் பகுதியில் 05 குழுக்களுக்கு கிடைத்த 412 விவசாய முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் அதில் 83 முறைப்பாடுகளுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்வு வழங்குவதற்கு முடியாதிருந்தது. | இணங்குவதுடன் தேவையான நடவடிக்கை எடுத்து தீர்வு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விவசாயிகளின் முறைப்பாடுகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 30 கமநல சேவைக் குழுக்களில் தீர்த்து வைக்கப்படாமல் பல வருட காலம் முதல் முன்கொண்டு வரப்படுகின்ற கூட்டுமொத்தமான ரூபா 11,834,104 பெற வேண்டிய 169 கணக்கு மீதிகள் மற்றும் கூட்டுமொத்தமான ரூபா 15,584,061 ஆன செலுத்த வேண்டிய 207 கணக்கு மீதிகள் என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நீண்ட காலம் முதல் முன் கொண்டு வரப்படுகின்ற மீதிகளை தீர்த்து வைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 09 கமநல சேவைக் குழுக்களுக்கு உரிய நெல் பயிரிடுவதற்காக ஈடுபடுத்தக் | ஏற்றுக்கொள்கின்றோம். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தரிசு வயல் |

| | | | |
|---|---|---|---|
| | கூடிய A தரத்தில் உள்ள வெற்றுக் காணிகளின் அளவு 2,253 ஏக்கர் 03 றூட் 20 பேர்ச் அளவாக இருந்ததுடன் நெல் பயிரிடப்படாமல் ஏனைய குறுங்கால பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தக் கூடிய B தரத்தில் உள்ள வெற்றுக் காணிகளின் அளவு 881 ஏக்கர் 12 பேர்ச் நெல் பயிரிடுவதற்கு அல்லது ஏனைய பயிர் செய்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | காணிகளை நெல் பயிரிடுவதற்கோ அல்லது ஏனைய பயிர்ச் செய்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கோ தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 15 கமநல சேவைக் குழுக்களுக்கு உரியதாக இனங்காணப்பட்ட பயிரிடப்பாடாத வயற் காணிகள் 2,588 ஏக்கர் 01 றூட் 25 பேர்ச் அளவில் மீளாய்வாண்டின் போது பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய காலத்தில் பசளை பணம் கிடைக்காமையினால் ஏற்பட்ட பிரச்சனை மற்றும் சுற்றாடல் பிரச்சனையின் காரணமாக பயிரிடப்பட்ட வயற் காணிகளின் அளவு குறைவான நிலையில் காணப்பட்டது. எதிர் காலத்தில் இந்த நிலைமையை மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பயிரப்படாத வயற் காணிகளில் பரியிடுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | லபுதுவ கமநல சேவை குழு ரூபா 382,066 மக்கள் வங்கி சேமிப்புக் கணக்கு மீதி ஒன்று நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட போதிலும் 1999 திசெம்பர் 29 ஆம் திகதி கணக்கில் பூச்சியமாக இருந்ததாக வங்கி அறிக்கையிட்டிருந்தது. | இது தொடர்பாக காலி மாவட்ட பிரதேச பிரதி ஆணையாளரின் மூலம் பெறப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள சேமிப்பு மீதி பௌதீக ரீதியில் காணப்படாதிருந்தமை தொடர்பாக பரிசோதனை ஒன்று மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | 04 கமநல சேவைக் குழுக்களின் மொத்த ஏக்கர் வரி இலக்கு ரூபா 885,600 ஆக இருந்ததுடன் ஏக்கர் வரி சேகரித்தல் ரூபா 551,626 ஆகும். ஏக்கர் வரி சேகரித்தலின் செயல் முன்னேற்றம் 52 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையிலான குறைந்த மட்டத்தில் | எதிர்காலத்தில் இது தொடர்பாக கவனம் செலுத்தி மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஏக்கர் வரி அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஏக்கர் வரியை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

காணப்பட்டது. அதில் 03 குழுக்களுக்கு உரிய 11 பிரிவுகளில் மொத்த ஏக்கர் வரி இலக்கான ரூபா 106,640 தொகையில் எந்த ஒரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.3 விளைவற்ற சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒன்று ரூபா 32,900 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 08 கமநல சேவைக் குழுக்களுக்குச் சொந்தமான கைவிரல் அடையாள இயந்திரங்கள் 2020 ஆம் ஆண்டின் போது பொருத்தப்பட்டிருந்த போதிலும் அந்த இயந்திரங்கள் மீளாய்வாண்டு வரையிலும் செயலிழந்து காணப்பட்டது. அதன் பிரகாரம் இயந்திரங்களை கொள்வனவு செய்வதால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். புதிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செயலிழந்த இயந்திரத்தை பழுதுபார்த்து விரைவாக பயன் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | எத்கந்துர மற்றும் கோதாகொட கமநல சேவை குழுக்களுக்குச் சொந்தமான விற்பனைச்சாலைக் கட்டிடம் பல வருட காலமாக மூடப்பட்டிருந்ததுடன் அந்தக் கட்டிடத்தை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது வாடகை அடிப்படையில் வழங்கி வருமானத்தை எடுப்பதற்கோ குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விற்பனை சாலைகளில் அடிப்படை வசதிகள் காணப்படாமையினால் நடாத்திச் செல்வதற்காக வாடகையாளர்கள் முன்வந்திருக்கவில்லை. | விற்பனைச்சாலை கட்டிடத்தை ஆக்க பூர்வமான பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அகங்கம் கமநல சேவைக் குழுவில் காணப்படுகின்ற தற்போது பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத 03 டெக்டர் டேலர்கள் மற்றும் 04 சக்கர டெக்டர் 01 என்பன 15 வருடகாலமாக அலுவலக வளவில் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்தன் காரணமாக | விற்றுத் தீர்ப்பதற்காக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத சொத்துக்களை நிதிப் பிரமானத்தின் பிரகாரம் விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலையில் துருப்பிடித்துக் காணப்பட்டது. | | வேண்டும். |
| (ஈ) | பின்கந்த கமநல சேவைக் குழுவிற்கு சொந்தமான ரூபா 844,200 பெறுமதியான சேமிப்பு கணக்கு பல வருட காலம் முதல் பயன்படுத்தப்படாமல் காணப்படுவதுடன் அந்த மீதியை அதிக நலனைப் பெறக் கூடிய வகையில் நிலையான வைப்பு ஒன்றில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். பிரதி ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | மிகை நிதியத்தை அதிக நலன்கள் கிடைக்கின்ற முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 22 கமநல சேவை குழுக்களுக்கு உரிய விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் 116 பேர், 08 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், 11 நிலைய முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள், 01 கமநல அபிவிருத்திப் பிரதேச உத்தியோகத்தர், 01 தொழிலாளர் என்ற பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்கள் தொடர்பாக நடவடிக்கை கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்தின் மூலமே நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பதவியணியினரை பகுப்பாய்வு செய்து தேவையான பதவிகளின் வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | முறையான இடம்மாற்றல் கொள்கை ஒன்று அமுல்படுத்தப்படாமையினால் 10 கமநல சேவைக் குழுக்களில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற பதவியணி உத்தியோகத்தர்கள் 09 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் ஒரே நிலையத்தில் சேவையாற்றுகின்றமை அவதானிக்கப்பட்டது. | கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு உரிய பணியாகும். | வருடாந்த இடம் மாற்றல் கொள்கையை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் எந்த ஒரு வருடத்திற்கும் உரிய நிதிக்கூற்றுக்கள் உரிய நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 33 கமநல சேவைக் குழுக்களினதும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 12 நாட்கள் முதல் 34 நாட்கள் வரையான கால தாமதத்துடனேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | குறித்துரைத்த திகதிக்கு முன்னர் கமநல அபிவிருத்தித் திணைக்களம் காலி மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. கமநல வங்கி

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 15 கமநல சேவைக் குழுக்களுக்கு உரியதாக செயற்படு நிலையில் 309 விவசாய அமைப்புக்கள் காணப்பட்டதுடன் அதில் 161 விவசாய அமைப்புக்கள் மாத்திரம் கமநல வங்கியில் வைப்புக்களை ஆரம்பித்திருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். விவசாய அமைப்புக்களுக்குச் சொந்தமாக போதியளவான நிதி காணப்படாமையின் காரணமாக வைப்புக்கள் ஆரம்பிக்கப்படவில்லை. | கமநல வங்கி மற்றும் கமநல அமைப்புக்களுக்கு இடையே புரிந்துணர்வை விருத்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நியாகம கமநல சேவைக்குழுவில் விவசாய அமைப்புக்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ரூபா 477,970 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் கடன் சேகரித்தல் பூச்சிய நிலையில் காணப்பட்டது. மேலும் அந்தக் கடன் மீதியில் இனங்காணப்படாத ரூபா 5,000 மீதியும் அவதானிக்கப்பட்டது. | விவசாய அமைப்புக்களின் கடன் மீதி 1999 ஆம் ஆண்டுக்கு முன்னிருந்து இனங்காணப்படாத மீதி 2012 ஆம் ஆண்டில் இருந்து மீண்டும் கொண்டு வரப்படுவதுடன் சரியான தகவல்களைக் கண்டறிய முடியாதிருந்தமையால் மீதி பதிவழிப்பதற்கு 2024 ஆகஸ்ட் 12 ஆம் திகதி குழு தீர்மானம் எடுத்திருந்தது. | நிலுவைக் கடனை அறவிடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 31 கமநல சேவைக் குழுக்களுக்கு உரிய 31 கமநல வங்கிகளினால் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டிருந்த செயற்திட்டக் கடன், விவசாயக் கடன், ஒரு இலட்ச கடன் தொகையில் 1,746 விவசாயிகளிடம் இருந்து அறவிட வேண்டிய கூட்டுமொத்தமான ரூபா 33,634,976 கடன் மீதி காலாவதியாகி இருந்தது. அந்தக் கடனை அறவிடும் செயல்முன்னேற்றம் மந்த நிலையில் காணப்பட்டது. | உரிய நிலுவைக் கடனை அறவிடும் நடவடிக்கைகளை தீர்மானித்து குழு மற்றும் நீதி மன்றத்தின் மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய 04/2012 என்ற கமநல அபிவிருத்தி திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் தவணைப் பணம் மற்றும் வட்டிப்பணம் அறவிடப்படல் வேண்டும். |